

சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி புதிய நிர்வாகிகள் அறிமுக மற்றும் ஆலோசனைக் கூட்டம், மாவட்ட அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. கலந்து கொண்டு அறிவுரை வழங்கினார். இதில் மாவட்ட வர்த்தக அணி நிர்வாகிகள், மயிலைப் பகுதி கிழக்கு, மேற்கு தியாகராயர் நகர் பகுதி கிழக்கு ,மேற்கு அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பாட்டாளி மக்கள் கட்சியின் திருவாலங்காடு ஒன்றியத் தலைவர் அறிவரசன், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் ஆர். உமாபதி உள்ளிட்ட பா.ம.க.வினர்கள் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலையில் தி.மு.க. ஒன்றிய கழக பொறுப்பாளர் ஏ.எல்.விஜயகுமார் ஏற்பாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார்கள். வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை மீண்டும் ஆட்சியில் அமர வைக்க இரவும் பகலும் கழகத்திற்காக பணியாற்றுவோம் என்று தி.மு.க.வில் இணைந்தவர்கள் தெரிவித்துக் கொண்டார்கள். அருகில் தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

### சென்னை மாநகராட்சிப் பகுதிகளில்

# 479.41 கி.மீ. நீளத்திற்கு சாலைகள் சீரமைக்கும் பணி!

## சென்னை மாநகராட்சி தகவல்!

**சென்னை, ஆக.30-**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் 418.56 கி.மீ. நீளம் கொண்ட 488 பேருந்து சாலைகள் மற்றும் 5653.89 கி.மீ. நீளம் கொண்ட 35,978 உட்புறச் சாலைகள் ஆகியவை பராமரிக்கப்பட்டு வருகிறது.**

மொத்தம் ரூ.489.22 கோடி மதிப்பீட்டில் 648.75 கி.மீ நீளத்திற்கு 3,987 எண்ணிக்கையிலான சாலைகள் மேம்படுத்த திட்டமிடப்பட்டது.

2025-26ஆம் ஆண்டில் 79 பேருந்து சாலைகள் 3908 உட்புறச்சாலைகள் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.150 கோடி மதிப்பீட்டிலும், நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.63.22 கோடி மதிப்பீட்டிலும், சிறப்பு திட்ட பணியின் கீழ் ரூ.180 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் சிறப்பு சாலைகள் திட்டத்தின் கீழ் ரூ.96 கோடி மதிப்பீட்டிலும் என 79 பேருந்து சாலைகள் 3908 உட்புறச்சாலைப் பணிகள் என மொத்தம் 3987 சாலைப்பணிகள் ரூ.489.22 கோடி மதிப்பீட்டில் ஒப்பம் கோரப்பட்டு, 20.05.2025 மற்றும் 20.06.2025 அன்று பணியானை வழங்கப்பட்டு பணிகள் தொடங்கி நடை





பெற்று வருகிறது. இதில் இதுவரை 1,951 சாலைப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இதர சாலைப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்தச் சாலைப் பணிகளை வருகின்ற செப்டம்பர் 15க்குள் முடித்திட திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் சாலைகளில் மக்களின் சேவைக்காக சென்னை குடிநீர் வாரியத்தின் மூலம் குடிநீர் வழங்குதல், பாதாளச் சாக்கடை இணைப்பு ஆகிய பணிகளுக்காகவும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மூலம் சாலைகளில் மின் கேபிள்கள் அமைத்தல் உள்ளிட்ட பணிகளுக்காக சாலை வெட்டுக்கள் மேற்கொள்ள உரிய வழிகாட்டுதல் நடைமுறைகளின்படி, சேவைத்துறைகளுக்கு ஒப்புதல் அளித்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இப்பணிகள் யாவும் துணை முதலமைச்சர் அவர்களின் கண்காணிப்பில் ஒவ்வொரு வாரமும் ஆய்வு செய்யப்பட்டு சாலை வெட்டுப் பணிகள் துரிதமாக செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகிறது.

இதன்படி, நடப்பாண்டில் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு மக்களின் சேவைக்காக 4,982 சாலைகளில் 859.98 கி.மீ. நீளத்திற்கு சாலை வெட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதில் 3266 சாலைகளில் 507.79 கி.மீ. நீளத்திற்கு பணிகள் முடிவுற்று சாலை சீரமைக்கும் பணி மேற்கொள்ள தடையில்லா சான்று பெறப்பட்டுள்ளது. இதில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் 2,976 சாலைகள் 476.89 கி.மீ. நீளத்திற்கு சாலை வெட்டு சீரமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இதர இடங்களில் சாலைவெட்டு சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு 30 சாலைகள் 4.72 கி.மீ நீளத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு, சாலை வெட்டு சீரமைக்கும் பணி மேற்கொள்ள தடையில்லா சான்று பெற்று பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் 19 சாலைகள் 2.52 கிமீ நீளத்திற்கு சாலை வெட்டு சீரமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இதரப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த இருசேவைத் துறைகளின் மூலம் 2995 சாலைகளில் 479.41 கீ.மீ. நீளத்திற்கு சாலை வெட்டு சீரமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

துணை முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் படி சாலை வெட்டு சீரமைக்கும் பணி மேற்கொள்ள தடையில்லா சான்று பெறப்பட்டுள்ள அனைத்து பணிகளும் செப்டம்பர் 2025 இறுதிக்குள் முடித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### சென்னை தென்மேற்கு மாவட்ட

# கலை - இலக்கிய பகுத்தறிவுப் பேரவைக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் ச.சண்முகநாதன் அறிக்கை!

சென்னை, ஆக.30-

சென்னை தென்மேற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் கலந்துரையாடல் கூட்டம் அவைத் தலைவர் இரா. கா.இளங்கோவன் தலைமையிலும், சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ. தலைமையிலும் (கி) பகுதிச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம். எல்.ஏ., மயிலை (கி) பகுதிச் செயலாளர் எஸ்.முரளி, தியாகராயர் நகர் (மே) பகுதிச் செயலாளர் கே. ஏழுமலை, மயிலை (மே) பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி., வட்டச் செயலாளர் அ.தவநேசன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

அதுபோது, பேரவையின் அனைத்து நிர்வாகிகளும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: செப்டம்பர் திங்கள் கழக முப்பெரும் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு மாவட்ட அமைப்பாளர் ச.சண்முகநாதன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# 39(அ) வட்ட கழக துணைச் செயலாளர் இருசம்மாள் மறைவு!

## ஆர்.டி.சேகர் – கலாநிதி வீராசாமி – ஜே.ஜே.எபினேசர் – இரா.லட்சுமணன் – எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் பங்கேற்பு !



சென்னை, ஆக30

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி கழகத்தை வளர்த்த மூத்த முன்னோடி 39(அ) வட்ட துணைச் செயலாளர் இருசம்மாள் வயது 80 (27.08.25 புதன்கிழமை) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்து சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, பகுதிச் செயலாளர் இரா.லட்சுமணன், மேற்கு பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், ஆர்.வெற்றிவீரன், என.மருதுகணேஷ், என்.அனிபா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி. சதிஷ்குமார், என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா.கோதண்டன், மா.நாகராஜன்,

ச.தமிழ்செல்வன், எம்.எம்.சாமி, பி.அன்பழகன், கே.மோகன், மா.ரூபசங்கர், தேவிகதிரேசன் எம்.சி, குமாரி நாகராஜன் எம்.சி, ப.ஆ.சண்முகம், ஒளி ஒலி பாபு, எஸ்.எம்.டி.ரவிச்சந்திரன், ராஜ்குமார், மற்றும்

அணிகளின் நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் உறவினர்கள் நண்பர்கள் பொது மக்கள் அனைவரும் அம்மையாரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.




சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் மு.மனோஜ் (ஏ)தமிழ்மாறன் ஏற்பாட்டில், சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் தலைமையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7வது நினைவு நாளை முன்னிட்டு விம்கோ காந்தி நகரில் அமைந்துள்ள Rehoboth முதியோர் இல்லத்தில் மதிய உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. அப்போது முதியோர் இல்லத்தில் வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று முதியோர் இல்லத்தில் 23.08.2025 அன்று SONY LED TV 40 Inches டிவி வழங்கினர். இந்த நிகழ்வில் ஏ.சரவணன், எஸ்.சதீஸ் குமார், சீ.ஜெகதீஸ், எ.ரமணன், வி.அஜித்குமார், பர்மா நகர் எம்.சசிகுமார், எம்.ஆகாஷ், எஸ்.ஆனந்த், ஐசக் சாமுவேல், மற்றும் கழக இளைஞரணி தோழர்கள் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனா.

### எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தலைமை! மேயர் வசந்தகுமாரி – கோ.காமராஜ், டி.காமராஜ் – எஸ்.இந்திரன் பங்கேற்பு!

# தாம்பரம் வர்த்தகர் அணி இரா.செல்வகுமார் இல்ல மணவிழா வரவேற்பு!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் – அன்பில் மகேஸ் பொய்யாமொழி – கோவி.செழியன் மற்றும் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. வாழ்த்து!

தாம்பரம், ஆக.30

தாம்பரம் மாநகர வர்த்தக அணி துணை செயலாளர் நகர மன்ற முன்னாள் உறுப்பினர்கள் இரா.செல்வகுமார், எஸ்.சுரேஷ், சசிதேவி சுரேஷ் ஆகியோரின் இல்ல திருமண வரவேற்பு விழா இன்று (30.8.25 சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு மேற்கு தாம்பரம் துரைசாமி ரெட்டி தெரு பாஸ்பேட் அலுவலகம் அருகே உள்ள ராஜகோபாலா திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்கு தாம்பரம் மாநகர கழகச் செயலாளர் எஸ். ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ் வரவேற்புரையாற்றுகின்றனர்.

பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் டி.காமராஜ்,தாம்பரம் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.இந்திரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மணமக்களை கழக பொருளாளர், கழக மக்களவை குழுத்தலைவர் டி. ஆர்.பாலு, குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், காஞ்சி வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன், பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி செழியன், காஞ்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., மாவட்டத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம். எல்.ஏ., மாவட்டத் துணைச் செயலாளர் வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., கழக வர்த்தக அணி செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம்,

தலைமை தீர்மான குழு உறுப்பினர் மீ.அ.வைத்திய லிங்கம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நெல்லிக்குப்பம் எஸ்.புகழேந்தி, தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரிதி இளம்சுருதி, காஞ்சி மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ. மனோகரன், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ. தமிழ்மாறன் , மண்டலகுழு தலைவர்கள், பகுதி கழகச் செயலாளர் வே.கருணாநிதி,ஜோசப் அண்ணாதுரை, பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயலாளர் எஸ்.சேகர், த.ஜெய்குமார், ஆ. நடராஜன், ஆர்.சுரேஷ், ஏ.கே.கருணாகரன், இ.எஸ். பெர்னட், ஜி.கே.விவேகானந்தன் என்கின்ற ரவி, கோல்டு பிரகாஷ், எல். பிரபு, உள்ளிட்ட பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, கழக தோழர்கள் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

மண விழாவுக்கு வருகை தருவோரை தாம்பரம் மாநகர தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். மகேஷ், பெருங்களத்தூர் வடக்கு பகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் செ.செல்வ பிரகாஷ், 50-வது வார்டு இளைஞர் அணி எஸ்.விஜய் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் - சென்னை தென்மேற்கு மாவட்ட

# அமைப்புசாரா ஓட்டுநர் அணி புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் மயிலை ஏ.சத்தியமூர்த்தி அறிக்கை!

சென்னை, ஆக. 30 -

சென்னை தென்மேற்கு மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி புதிய நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

இது குறித்து மாவட்ட அமைப்பாளர் மயிலை ஏ.சத்தியமூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம். எல்.ஏ. தலைமையில் சென்னை தென்மேற்கு மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாவட்டதிற்கு உட்பட்ட மயிலை பகுதி கிழக்கு,மேற்கு, தியாகராயர் நகர் பகுதி கிழக்கு, மேற்கு புதியதாக நியமிக்கப் பட்டுள்ள பகுதி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம் நாளை (31.8.2025 - ஞாயிற்றுக் கிழமை) காலை 10.00 மணியளவில், மயிலை சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இதில் மாவட்ட தலைவர், துணை தலைவர், மாவட்டத் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் மயிலை ஏ.சத்தியமூர்த்தி அறிக்கை விடுத்துள்ளார்.

### ஜி.எஸ்.டி. வரி மாற்றப் பாதிப்புகள் – புதுடெல்லியில்

# எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களின் நிதி அமைச்சர்கள் முக்கிய ஆலோசனை!

டெல்லி, ஆக. 30-

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களின் நிதி அமைச்சர்களின் கூட்டம் டெல்லியில் தொடங்கியது. கர்நாடக மாநில அரசு இல்லத்தில் நடைபெற்று வரும் கூட்டத்தில் தமிழ்நாடு நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, கர்நாடக அமைச்சர் கிருஷ்ணா பைரே கவுடா மற்றும் கேரளா, தெலுங்கானா, பஞ்சாப், இமாச்சல், ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களின் நிதியமைச்சர்களும் கலந்து கொண்டுள்ளனர். மாநிலங்களுக்கு உரிய ஜி.எஸ்.டி. இழப்பீட்டை வழங்குதல், அமெரிக்கா வரி விதிப்பு மூலம் ஏற்பட்டுள்ள தொழில் பாதிப்பு பிரச்சனைகளுக்கு ஒன்றிய அரசு தீர்வு காண்பது உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது.

ஜி.எஸ்.டி. வரி குறைப்பால் ஏற்படும் லாபம் பெரு நிறுவனங்களுக்கு மட்டுமே சென்று சேராமல் மக்களுக்கு பயனளிக்கும் வகையில் இருக்க வேண்டும் என்றும் விவாதிக்கப்பட்டு வருகிறது. அடுத்தவாரம் நடைபெறும் ஜி.எஸ்.டி. கூட்டத்தில் எழுப்பிய வேண்டிய முக்கிய பிரச்சினைகள் குறித்தும் ஆலோசித்து வருகின்றனர்.

### மு.மனோஜ் (எ) தமிழ்மாறன் நிகழ்ச்சி ஏற்பாடு!

# கலைஞர் நினைவுநாள்: முதியோர் இல்லத்தில் உணவு - உதவிகள்!

## ஆர்.டி.மதன்குமார் தலைமையில் வழங்கினர்!

சென்னை,ஆக.30-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் மு. மனோஜ் (எ)தமிழ்மாறன் ஏற்பாட்டில், சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் தலைமையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7வது நினைவு நாளை முன்னிட்டு விம்கோ காந்தி நகரில் அமைந்துள்ள Rehoboth முதியோர் இல்லத்தில் மதிய உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழ ங்கப்பட்டது.

அப்போது முதியோர் இல்லத்தில் வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று முதியோர் இல்லத்தில் 23.8.2025 அன்று SONY_LED_TV 40 Inches டிவி வழங்கினர்.

இந்த நிகழ்வில் ஏ. சரவணன், எஸ்.சதீஸ் குமார், சீ.ஜெகதீஸ், எ. ரமணன், வி.அஜித்குமார், பர்மா நகர் எம்.சசிகுமார், எம்.ஆகாஷ், எஸ்.ஆனந்த், ஐசக் சாமுவேல், மற்றும் கழக இளைஞரணி தோழர்கள் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.



தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2. மாமன்ற உறுப்பினர்கள் கூட்டம் மண்டல அலுவலகத்தில் மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் நடைபெற்றது. ரூபாய் 3.50 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அப்பொழுது உதவி ஆணையர், மண்டலத்தின் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.